விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 27 ஞாயிறு 11.07.2021 மலர் - 2, இதழ் - 96

# கொரோனா பரவல் குறையுமா ?



விஜயபாரதம்

சர்வதேச அளவில் கோவிட் பரவல் குறையாமல் உள்ளது குறித்து கருத்து தெரிவித்த உலக சுகாதார அமைப்பு தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன், 'உலக சுகாதார அமைப்பின் ஆறு மண்டலங்களில் ஐந்தில் கொரோனா பெருந்தொற்று அதிகரித்து வருகிறது. ஆப்ரிக்காவில் மரணமடைபவர்களின் விகிதம் கடந்த இரண்டு வாரங்களில் 30ல் இருந்து 40 சதவீதமாக அதிகரித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 5 லட்சம் பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளது. இதனால், தொற்று பரவல் வேகம் குறையவில்லை. உருமாறிய டெல்டா வகை வைரஸ், சமூக இடைவெளி இன்றி மக்கள் கூடுதல், ஊரடங்கில் பெரிய தளர்வுகள், தடுப்பூசி போடும் வேகம் அதிகரிக்காதது போன்ற காரணங்களால் கொரோனா பரவல் தொடர்ந்து அதிகரிக்கிறது. முதன்முதலில் தோன்றிய வைரசால் பாதிக்கப்பட்ட ஒருவர் மூலம் 3 பேருக்கு தொற்று ஏற்படும். ஆனால், டெல்டா வைரசால் பாதிக்கப்பட்ட நபர் மூலம் 8 பேருக்கு பாதிப்பு ஏற்படக்கூடும்' என கூறினார்.

# கோயில் நிலம் 306 ஏக்கர் மாயம்


விஜயபாரதம்

திருச்சி, ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோயிலில், ஆய்வு மேற்கொண்ட ஹிந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, 'ரங்கநாதர் கோயிலுக்கு 1866ம் ஆண்டு 330 ஏக்கர் நிலம் இருந்தது. தற்போது, 24 ஏக்கர் மட்டுமே உள்ளது. மற்றவை குடியிருப்பு, கடைகளாக மாறியுள்ளன. அதில் இருப்பவர்கள், மனு அளித்தால், வாடகைதாரர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவர். கோயில் சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கடந்த பத்தாண்டுகளில் பராமரிக்கப்படாமல் உள்ள தமிழக கோயில்களில் ஆக்கபூர்வமான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. குடமுழுக்கு நடத்தாத கோயில்களின் எண்ணிக்கையை விரைவில் கண்டறிந்து, அங்கு குடமுழுக்கு நடத்த ஏற்பாடு செய்யப்படும். ஸ்ரீரங்கம் கோயிலில் உள்ள கோசாலையில் பாதுகாப்புடன் சிறப்பாக பராமரிக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது' என தெரிவித்தார்.

# "கூ" சமூக வலைதளத்தில் இணைந்த ஆர்.எஸ்.எஸ்.



விஜயபாரதம்

பாரத பேரரசின் புதிய தகவல் தொழில்நுட்ட சட்டவிதிகளை ஏற்க மறுத்து வரும் டுவிட்டர் தொடர்ந்து பாரத இறையாண்மைக்கும் அரசுக்கு எதிராகவும் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசு, நீதிமன்றம், பொதுமக்கள் என பலரும் பலமுறை அதற்கு கண்டனம் தெரிவித்தும் அது மாறுவதாகத் தெரியவில்லை. இதையடுத்து பாரத தேசத்தவர்கள் பலரும், 'கூ' சமூக வலைதளத்தில் கணக்கு துவங்கி வருகின்றனர். மத்திய அமைச்சர் பியுஷ் கோயல், மத்திய பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் என அரசியல்வாதிகளும் அனில் கும்ப்ளே உள்ளிட்ட பிரபலங்களும் 'கூ' சமூக வலை தளத்தில் கணக்குத் துவக்கியுள்ளனர். இந்நிலையில் 'கூ' சமூக வலைதளத்தில், ஆர்.எஸ்.எஸ் சார்பிலும் கணக்கு துவக்கப்பட்டு உள்ளது. இது குறித்து ஆர்.எஸ்.எஸ் செய்தி தொடர்பாளர் கூறுகையில், 'தொண்டர்கள் மற்றும் மக்களை, பாரத மொழிகளில் தொடர்பு கொள்ளும் நோக்கில், 'கூ' சமூக வலைதளத்தில் ஆர்.எஸ்.எஸ் இணைந்துள்ளது' என தெரிவித்தார். இது குறித்து 'கூ' நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கூ சமூகவலைதளத்தில், 65 லட்சத்துக்கும் அதிகமான பயனாளர்கள் இணைந்துள்ளனர். இப்போது, ஆர்.எஸ்.எஸ் அமைப்பு இணைந்துள்ளதால், விரைவில் பயனாளர்கள் எண்ணிக்கை, ஒரு கோடியை தாண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லியோனியும் பாடநூல் நிறுவன சர்ச்சையும்


விஜயபாரதம்

தி.மு.க கொள்கை பரப்பு செயலாளரும் ஆபாச பேச்சுக்கு புகழ் பெற்றவருமான லியோனியை தமிழக பாடநூல் கழக தலைவராக நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கு இந்து முன்னணி, அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர் செல்வம், பா.ம.க தலைவர் ராமதாஸ் உள்ளிட்ட தலைவர்களும் பொதுமக்களும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். தமிழக அரசு இந்த உத்தரவை திரும்பப் பெறவும் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், அனைத்து தி.மு.க தலைவர்களை போலவே, நல்லநாள்பார்த்து பதவி ஏற்க நேற்று முன்தினம், அமாவாசையை தேர்ந்தெடுத்தார் லியோனி. அன்று காலை பதவியேற்பு நடக்கும் என அறிவிக்கப்பட்டு, பாடநூல் கழக அலுவலகத்தில், அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால், பதவியேற்க லியோனி வரவில்லை. வராததற்கான காரணமும் தெரிவிக்கப்படவில்லை.

# ஒலிம்பிக்கில் வீரர்களுடன் மோடி



விஜயபாரதம்

ஜப்பானின் டோக்கியோ நகரில் வரும் 23ம் தேதி முதல் ஆகஸ்ட் 8 வரை ஒலிம்பிக் போட்டி நடைபெற உள்ளது. இந்த ஒலிம்பிக்கில் பாரதத்தின் சார்பில் 115க்கும்மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ள உள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வீரர்,வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் விதமாக பிரதமர் நரேந்திர மோடி, வரும் 13ம் தேதி மாலை 5 மணி அளவில் அவர்களுடன் காணொலி மூலமாக உரையாட உள்ளார்.

# ரேஷன் குறித்து புகார்



விஜயபாரதம்

தமிழகத்தில் செயல்படும் ரேஷன் கடைகளில் தொடர்ந்து பல்வேறு முறைகேடுகள் நடக்கின்றன, பொருட்கள் தரமற்றதாக வழங்கப்படுகிறது, ரேஷன் கடைகள் சரியான நேரத்தில் திறப்பதில்லை என்று புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. இணையவழியில் புகார்கள் தெரிவிப்பதில் சிரமம் இருப்பதாக பொதுமக்கள் கூறுகின்றனர். புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என தெரியவில்லை என்றும் கேட்கின்றனர். இதன் காரணமாக தமிழகத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் பொதுமக்கள் புகார் தெரிவிக்க பதிவேடு வைத்து பராமரிக்க வேண்டும். அதை கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர்கள் கண்காணிக்க வேண்டும் என்று அரசு கூடுதல் தலைமை செயலாளர் உத்தரவிட்டுள்ளார். ஆனால், தமிழகத்தில் அலைபேசி பயன்படுத்துபவர்கள் அதிகம் பேர் உள்ளனர். அவர்கள் புகார் தெரிவிக்க அலைபேசி செயலி, இணைய வசதி சீர்படுத்துதல், தொழில்நுட்ப மேம்பாடு போன்ற நவீன வழிமுறைகளை பின்பற்றாமல் மக்களை அரசு ஏன் பின்னோக்கி இழுக்கிறது என நெட்டிசன்கள் இது குறித்த விமர்சனத்தை முன் வைக்கின்றனர்.

# அரசு தங்க சேமிப்புப் பத்திரம்



விஜயபாரதம்

அரசு தங்க பத்திரத் திட்டம் 4 வது வரிசை வெளியிடப்பட்டுள்ளது. பத்திரத்தின் வெளியீட்டு விலை ஒரு கிராமுக்கு ரூ 4,807. என்றும் ஜூலை 20ஐ செட்டில்மெண்ட் தேதியாக கொண்ட அந்த தங்க பத்திரங்கள் 2021 ஜூலை 12 முதல் 16 வரை திறந்திருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆன்லைன் மற்றும் டிஜிட்டல் முறையில் தங்க கடன் பத்திரங்களை வாங்கும் முதலீட்டாளர்களுக்கு ஒரு கிராமுக்கு ரூ.50 சிறப்பு தள்ளுபடியும் தரப்படுகிறது. எனவே, அத்தகைய முதலீட்டாளர்களுக்கு தங்கத்தின் வெளியீட்டு விலை, ஒரு கிராமுக்கு ரூ 4,757 ஆக மட்டுமே இருக்கும்.

# கோவேக்சின் அனுமதி



விஜயபாரதம்

பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவேக்சின் தடுப்பூசிகளுக்கான மூன்றாம் கட்ட சோதனை முடிவுகள் ஜூன் 22ஆம் தேதி வெளியிடப்பட்டது. கோவேக்சினின் நோய் எதிர்ப்பு திறன் மிக அதிகமாக உள்ளதாக கூறிய, உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன், டெல்டா வைரஸுக்கு எதிராக இதன் செயல் திறன் சிறப்பாக இருப்பதாக கூறியுள்ளார். கோவேக்சின் தடுப்பூசிக்கு உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற, ஜூன் 23ம் தேதி, ஜெனிவாவில், உலக சுகாதார நிறுவன அதிகாரிகளுடன் பாரத் பயோடெக் நிறுவன அதிகரிகள் முதல் கட்ட பேச்சு வார்த்தை நடத்தினர். அவசர கால பயன்பாட்டிற்காக அனுமதி அளிக்கப்பட்டுள்ள அனைத்து தடுப்பூசிகளின் செயல் திறன்களை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், இவற்றைப் பற்றி மேலும் அதிக தகவல்களை சேகரிப்பதாகவும் சௌமியா சுவாமிநாதன் கூறியுள்ளார். மேலும், மூன்றாவது டோஸ் தடுப்பூசி அளிக்க உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்கவில்லை என்று கூறிய சௌமியா சுவாமிநாதன், முதல் கட்ட தடுப்பூசி விநியோகத்தை அனைத்து நாடுகளும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# லெக்கிம்பூர் கெரி குற்றவாளி கைது



விஜயபாரதம்

உத்தர பிரதேசம், லெக்கிம்பூர் கெரி மாவட்டத்தில் தொகுதித் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய வந்த, சமாஜ்வாடி கட்சி வேட்பாளர் ரிது சிங் மற்றும் அவரது உதவியாளருடன் தவறாக நடந்து கொண்ட ஒருவரை உத்தரபிரதேச காவல்துறை கடந்த வெள்ளிக்கிழமை அன்று கைது செய்தது. கைது செய்யப்பட்டவர், பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட ஒரு சுயேச்சை வேட்பாளரின் ஆதரவாளர் என கண்டறியப்பட்டது. இதில் மெத்தனமாக செயல்பட்ட ஒரு டி.எஸ்.பி, எஸ்.எச்.ஓ, ஒரு ஆய்வாளர், மற்றும் 3 துணை ஆய்வாளர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மற்ற குற்றவாளிகளை கைது செய்ய நான்கு தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், குற்றவாளிகளுக்கு எதிராக, தேசிய பாதுகாப்புச் சட்டம் மற்றும் கேங்க்ஸ்டர் சட்டத்தின்படி, கடுமையான நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டார்.

# பொது சிவில் சட்டம் நீதிமன்றம் அறிவுறுத்தல்



விஜயபாரதம்

பொது சிவில் சட்டம் தொடர்பான விசாரணையின் போது, "நவீன இந்திய சமூகம் படிப்படியாக ஒரேவிதமானதாக மாறி, மதம், சமூகம் மற்றும் சாதியின் பாரம்பரிய தடைகளை களைந்து வருகிறது. மேலும் இந்த மாறிவரும் முன்மாதிரிகளைப் பார்க்கும்போது, ஒரு பொதுவான சிவில் சட்டம் தேவையாக உள்ளது. நாட்டில் அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம் இருக்கவேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். இதை அமல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும்" என்று டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி பிரதிபா எம். சிங் தெரிவித்துள்ளார்.

# ஆப்கன் யார் வசம்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளை ஆகஸ்ட் மாதம் 31ம் தேதிக்குள் முழுமையாக திரும்ப பெற்றுவிடும் என கடந்த வாரம் அமெரிகக் அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். ஏற்கெனவே அமெரிக்கப் படைகள் அமெரிக்க திரும்பி செல்லும் பணிகள் தொடங்கி பெரும்பாலான வீரர்கள் நாடு திரும்பிவிட்டனர். இந்நிலையில் அமெரிக்கப்படைகள் திரும்ப பெறப்பட்ட பகுதிகளில் தாலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில், ரஷ்யாவின் மாஸ்கோவில் செய்தியாளர்களை சந்தித்த தாலிபானின் தூதுக்குழு, ஏற்கெனவே மொத்தமுள்ள 350 மாவட்டங்களில் 290 மாவட்டங்களை கைப்பற்றிவிட்டதாக தெரிவித்தது. குறிப்பாக ஆப்கானிஸ்தான் – ஈரான் எல்லை பகுதியை முழுமையாக கைப்பற்றி அங்கிருந்த ஆப்கானிஸ்தான் வீரர்களை திருப்பி அனுப்பிவிட்டதாக தெரிவித்தனர். இதனை ரஷ்யாவும் உறுதி செய்துள்ளது. மேலும் ஆப்கானிஸ்தானை முழுமையாக கைப்பற்றிய பிறகு அது பயங்கரவாதிகளின் மையமக அமையாது குறிப்பாக ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பை ஆப்கானிஸ்தானில் இருந்து செயல்பட விடமாட்டோம் என தாலிபான் தூதுக்குழு தெரிவித்துள்ளது. ஆனால் இது குறித்து ஆப்கானிஸ்தானின் அமைச்சரவை செய்தி தொடர்பாளர், தாரிக் ஏரியான் கூறும்போது, தாலிபான் அமைப்பு கூறுவதில் உண்மை இல்லை என்றும், ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான பகுதிகள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஒரு சிலப் பகுதிகளில் மட்டுமே தாலிபானின் ஆதிக்கம் உள்ளது. அந்த பகுதிகளை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆப்கான் அரசு எடுத்து வருவதாக தெரிவித்தார்.

# ஐ.பி.எஸ். அதிகாரி மீது தேச துரோக வழக்கு




விஜயபாரதம்

சத்தீஸ்கரில் ஜி.பி சிங் என்ற ஐ.பி.எஸ் அதிகாரி முறைகேடாக சொத்து சேர்த்ததாக எழுந்த புகாரை அடுத்து ஊழல் தடுப்பு பிரிவு, பொருளாதார குற்றப்பிரிவு அதிகாரிகள் அவரது வீட்டில் சோதனை நடத்தினர். அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். சோதனையில் கிடைத்த ஆவணங்கள் மூலம், அவர் அரசுக்கு எதிராகவும், மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராகவும் சதி செயலில் ஈடுபட்டது தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். இதன் அடிப்படையில், அவர் மீது தேச துரோக வழக்கு, மதம், மொழி அடிப்படையில் இரு பிரிவினர் இடையே மோதலை ஏற்படுத்துதல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# கர்ல் எட்வர்ட்டுக்கு தடை



விஜயபாரதம்

கர்ல் ராக் என்ற பெயரில் யூடியூப் சேனல் நடத்தி வருபவர் நியூசிலாந்தை சேர்ந்த கர்ல் எட்வர்ட் ரைஸ். இவர் பாரதம் உட்பட பல நாடுகளில் பயணம் மேற்கொண்டு தனது யூடியூப் சேனலில் பதிவிட்டு வருகிறார். இவர் டெல்லியை சேர்ந்த மனீஷா என்ற பெண்ணை 2019ல் திருமணம் செய்துகொண்டார். அவரது யூடியூப் சேனலில் பாரதம் பற்றி மிகவும் மோசமான கருத்துகளை உருவாக்கும் வீடியோக்கள் பல பதிவிட்டார். மேலும், விசா விதிகளை மீறி, குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு (சி.ஏ.ஏ) எதிராக நடைபெற்ற வன்முறை போராட்டத்திலும் பங்குபெற்றார். கடந்த ஆண்டு இந்தியாவை விட்டு வெளியேறிய எட்வர்ட் பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளுக்கு பயணம் செய்தார். பின்னர், பாரதம் வர, தனது விசாவை புதுப்பிக்க மத்திய உள்துறை அமைச்சகத்தில் எட்வர்ட் விண்ணப்பித்தார். ஆனால், கர்ல் எட்வர்ட் பாகிஸ்தான் நாட்டிற்கு சென்று, அந்நாட்டு உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயுடன் தொடர்பில் இருந்தது போன்ற காரணங்களால் கர்ல் எட்வர்ட்டிற்கு இந்திய விசா உள்துறை அமைச்சகத்தால் மறுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. அவர் இந்தியாவிற்குள் நுழைய 1 ஆண்டு தடை விதித்துள்ளது. கர்ல் எட்வர்ட்டின் விசா ரத்தை எதிர்த்து அவரின் மனைவி டெல்லி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

# விமானிகளை குறிவைக்கும் தாலிபான்கள்



அமெரிக்க துருப்புக்கள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறி வருகின்றன. ஆகஸ்ட் இறுதிக்குள் மொத்த அமெரிக்க ராணுவமும் ஆப்கனில் இருந்து வெளியேறிவிடும் என எதிர்பார்க்கப்படும் சூழலில், தற்போது தாலிபான் பயங்கரவாதிகள் ஆப்கன் ராணுவத்தில் உள்ள விமானப்படையினரை குறிப்பாக விமானிகளை குறிவைத்துக் கொல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மொத்தமுள்ள 65 விமானிகளில், இதுவரை 7 விமானிகள் கொல்லப்பட்டுள்ளனர். தாலிபான் பயங்கரவாதிகளுக்கு விமானப்படை கிடையாது. எனவே அரசு வசம் உள்ள பெரிய பலமான விமானப்படையை நிர்மூலப்படுத்தினால் ஆப்கனை எளிதாகக் கைப்பற்றலாம் என்பது அவர்களின் எண்ணம்.

விஜயபாரதம்

# புதிய மக்கள் தொகை கொள்கை

உத்தரபிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசு, அம்மாநிலத்தின் 202130க்கான புதிய மக்கள் தொகை கொள்கையை உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு ஜூலை 11 அன்று வெளியிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு – 4’ன் தரவுகளின் அடிப்படையில் சுகாதாரத் துறை இந்தக் கொள்கையைத் தயாரித்துள்ளது. இந்த புதிய மக்கள்தொகைக் கொள்கை, மக்களுக்கு மேம்பட்ட சுகாதார வசதிகள், சேவைகளை வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு 2026 மற்றும் 2030 ஐ இலக்காகக் கொண்டு இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும். மக்கள் தொகை அதிகரிப்புக்கு, வறுமை, கல்வியறிவின்மை போன்றவை முக்கியக் காரணிகளாக உள்ளன. சில சமூகங்களில் மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வு இல்லாமை உள்ளது. எனவே, சமூகத்தை மையமாகக் கொண்ட விழிப்புணர்வு முயற்சிகள் தேவை.

விஜயபாரதம்



# டிரோன்களை பயன்படுத்தும் பாகிஸ்தான்



விஜயபாரதம்

சமீபத்தில் பாரதத்தில் ஜம்மு விமானப்படை தளத்தில் இரண்டு சிறிய டிரோன் தாக்குதல்கள் நடைபெற்றன. இது பாகிஸ்தானின் சதி என கண்டறியப்பட்டுள்ள சூழலில், அந்த டிரோன்கள் சீனாவில் தயாரிக்கப்பட்டவை என தற்போது தெரியவந்துள்ளது.

**பாகிஸ்தானின் ஆர்வம்:**

பாகிஸ்தான் கடந்த 2 / 3 மாதங்களாக டிரோன் தொழில்நுட்பத்தில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. சீனா மற்றும் துருக்கி நாடுகள், பாகிஸ்தானுக்கு டிரோன்களை வழங்கி வருகின்றனர். இது குறித்த நீண்ட விவாதம் கடந்த ஏப்ரல் 15ல் பாகிஸ்தான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஃபவாத் சவுத்ரி மற்றும் சீன டி.ஜே.ஐ நிறுவனத் தலைவர் டா ஜியாங் இடையே நடைபெற்றது.

**உற்பத்தி:**

பாகிஸ்தான் அரசு பெருமளவில் டிரோன்களை உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை இந்த விவாதத்தில் முன்வைத்தது. மேலும், பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் துருக்க டிரோன் உற்பத்தியாளரான பேரக்தரின் தொழிற்சாலைக்கு சென்று இரண்டு வகையான டிரோன்களை பார்வையிட்டு அதனை பாகிஸ்தானில் கூட்டாக உற்பத்தி செய்வது குறித்து பேசியுள்ளனர். இந்தவகை டிரோன்கள், 22,5000 அடி உயரத்தில் 24 மணி நேரம் பறக்கக்கூடியது என்பதுடன் 150 கி.மீ தூரத்தில் உள்ள பொருட்களையும் துல்லியமாக படமெடுக்கக் கூடியது.

**சீன டிரோன்கள்:**

கடந்த மே 22 முதல் ஜூலை 6க்குள் பாகிஸ்தானின் முப்படை அதிகாரிகள் குழு சீனாவில் உள்ள வான் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு விஜயம் செய்தது. இந்த குழு மேம்பட்ட உயர் முதல் நடுத்தர உயர விமான பாதுகாப்பு அமைப்பு (HIMADS) பற்றி ஆய்வு செய்தது. பாலகோட் போன்ற

தாக்குதல் நடைபெற்றால் சீனாவின் ஹிமாட்ஸ் டிரோன்கள் தங்களை பாதுகாக்கும் என பாகிஸ்தான் நம்புகிறது.

**சோதனை:**

சமீபத்தில் யு.ஏ.வி எஸ் 250லிருந்து ஏவுகணையை வீசி பாகிஸ்தான் சோதனை செய்தது. இதன் நோக்கம், பாகிஸ்தானின் எல்லைக்கு அருகிலுள்ள பாரத எல்லை பிராந்தியங்களை உளவு பார்ப்பது, தாக்குதல் நடத்துவது என்பது சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

**பாகிஸ்தானின் சொந்த டிரோன்:**

பாகிஸ்தான் விமானப்படை மற்றும் தேசிய பொறியியல் மற்றும் அறிவியல் ஆணையம் (நெஸ்காம்) உருவாக்கிய புராக் டிரோனில் இருந்து புர்க் லேசர் வழிகாட்டும் ஏவுகணையை சோதிக்க உள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இது முதன்முதலில் கடந்த மார்ச் 2015ல் கைபர் பிராந்தியத்தில் தனது சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக பாகிஸ்தான் ராணுவத்தால் பயன்படுத்தப்பட்டதாக உலக நாடுகளால் நம்பப்படுகிறது.

**தற்காப்பு:**

மற்ற நாடுகளின் டிரோன்களின் இயக்கத்தை கண்காணிப்பது, தடுப்பது, தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக ஜெர்மனியில் இருந்து ‘ஆர்டோஸ் சிஸ்டம்ஸ்’ வாங்கவும் பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

பாரத அரசும் நமது ராணுவமும் இந்த விஷயங்களை உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் உள்ளது. எனவே, சரியான சமயத்தில், தேவையான நடவடிக்கைகளை எடுத்து தன்னை தற்காத்துக் கொள்வது எப்படி என்பதை பாரதம் நன்கு அறியும். தேவைப்பட்டால் எதிர் நடவடிக்கை எடுத்து எந்த சவாலையும் முறியடிக்கும் வல்லமை பாரதத்திற்கு உண்டு. இது ஏற்கனவே பலமுறை உலகிற்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

மதிமுகன்

விஜயபாரதம் தேசிய வார இதழ்
சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .
93613 99006

# உலக மக்கள் தொகை நாள்



விஜயபாரதம்

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11 மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலக மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு முயற்சியாக 'உலக மக்கள் தொகை நாள்' கொண்டாடப்படுகிறது. 1987ம் ஆண்டில் இதே நாளிலேயே உலக மக்கள் தொகை ஐந்து பில்லியனைத் தாண்டியது.

உலக மக்கள்தொகை வளர்ச்சியானது கிபி 1650 ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் விரைவாக வளரத் தொடங்கியது. 1840ல் 100 கோடி மக்கள் தொகையாகவும், 1927ல் 200 கோடியாகவும் வளர்ச்சியடைந்திருந்தது. எனினும் 1960ல் 300 கோடியை 39 ஆண்டுகளிலேயே எட்டியிருந்தது., 1999ம் ஆண்டில் 600 கோடி மக்கள் தொகையினை அடைந்திருந்ததாக மக்கள் தொகை கணக்கீட்டு ஆணையத்தின் அறிக்கை தெரிவித்திருக்கின்றது.

இதே விகிதத்தில் உலக மக்கள் தொகையின் வளர்ச்சி இருக்குமானால் எதிர்காலத்தில் உணவு, நீர், சூழல் மாசடைதல், சமூகச் சீர்கேடுகள், சுகாதாரப் பிரச்சினைகள், வேலையின்மை, போக்குவரத்து நெரிசல், நிலப் பற்றாக்குறை, நிலைத்து நிற்கும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் முக்கிய பிரச்சினைகளாக உருவெடுக்கும் என்று இனம் காணப்பட்டுள்ளன. இவற்றுடன் இன்று ஒட்டுமொத்தமாக தலையெடுத்துள்ள பொருளாதார நெருக்கடியும் தலைதூக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

மக்கள்தொகைப் பெருக்கத்தினால் எளிய மக்கள் மத்தியில் குடும்ப நலத் திட்டமிடல்கள் பற்றிய கருத்தரங்குகள், பாதுகாப்பான கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஊடகங்கள் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் சிறப்பான பலனைத் தரும். மேலும் பள்ளிகளில் மக்கள்தொகைக் கல்விக்கு முக்கியமளிப்பதுடன், மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் சமூகப் பொருளாதார தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் அவசியமாகின்றது.

மேலும் மக்கதொகை கட்டுப்பாட்டை திட்டமிட்ட ரீதியில் எதிர்க்கும் மதவாதிகளின் மனதை மாற்றி அந்த மக்களையும் மக்கள்தொகை அதிகரிப்பதின் விளைவுகளால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்னைகளை உணரச் செய்து அவர்களையும் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தை கடைபிடிக்க செய்ய வேண்டும். இது ஒன்றே மக்கள்தொகையை கட்டுக்குள் வைக்க ஒரே வழி.